# தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்
# Tamilnadu Electricity Board Accounts And Executive Staff Union
(Affiliated with Public Service International)

(Regd. No. 2472) (Recognised) Head Quarters : Chennai
Email Address: aesugeneralsecretary@yahoo.com, www.tnebaesu.com Phone : 28547015
Fax : 91-44-28410616

**தலைவர் : க. சந்திரசேகரன், பி.ஏ.,** **பொதுச்செயலாளர் : ச.வெ. அங்கப்பன்**

29, Meeran Sahib Street, Anna Salai, Chennai - 600 002.


சென்னை – 2
21.02.2011

பெறுநர்:

வட்டச்செயலாளர்கள் (பகிர்மான வட்டங்கள்)
மண்டலச் செயலாளர்கள்
மத்தியச் சங்கப் பொறுப்பாளர்கள்

அன்புடையீர்,

வணக்கம். சங்கச் செய்திகளை உடனுக்குடன் பரிமாறிக்கொள்வதற்காகத் தங்களுக்கெல்லாம் சங்கச் செலவில் கைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன.

பல நேரங்களில் தொடர்புகொள்ள முயலும்போது பல பேர் அழைப்பை ஏற்பதில்லை காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை சில நேரங்களில் அவர் கைபேசியை வீட்டில் வைத்துவிட்டு அலுவலகம் சென்று விட்டார் என பதில் வருகின்றது.

மத்தியச் சங்கத்திலிருந்து அழைக்கும் போது அழைப்பை ஏற்காதவர்கள் Missed Call என்பதையும் கவனிப்பதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் எந்த நோக்கத்திற்காக சங்கச் செலவில் உங்களுக்கெல்லாம் கைபேசி வழங்கப்பட்டுள்ளதோ அதன் நோக்கம் நிறைவேறுவதில்லை என்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வருங்காலத்தில் மேற்குறிப்பிட்ட தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டுகின்றேன்.

மேலும்

1) 15.03.2011 க்குள் 2011 ம் ஆண்டுக்கான சந்தாவை வசூலித்து மத்தியச் சங்கப் பங்குத் தொகையை அனுப்புவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் விவரத்தை தெரிவித்திட வேண்டுகின்றேன்.

2) வருவாய் பிரிவு கணக்கு மேலாளர்களை பிரிவு அலுவலகங்களுக்கு ஆய்வுக்கு அனுப்பி வைக்க மேற்பார்வைப் பொறியாளர்களிடம் பேசப்பட்டதா, பேசப்பட்டிருப்பின் அதற்கென மேற்பார்வைப் பொறியாளர் அல்லது கோட்டப் பொறியாளர் பிறப்பித்த உத்தரவின் நகல் ஒன்றினை அனுப்பி வைத்திட வேண்டுகின்றேன். ஆய்வுக்குச் சென்றவர்கள் உதவிக்கணக்கு அலுவலருக்கு சமர்ப்பித்த ஆய்வறிக்கையின் நகல்கள் ஒன்றிரண்டை அனுப்பி வைத்திட வேண்டுகின்றேன்.

3) வருவாய் பிரிவில் நியமிக்கப்பட்ட கணக்கு மேலாளர்களை மாற்றுப் பணிக்கு நியமித்து பிறப்பிக்கப்பட்டோரின் பட்டியலை அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டிருந்தது. பெரும்பான்மையான வட்டங்களிலிருந்து இந்த வேண்டுகோளுக்கு இன்று வரை பதில் வரவில்லை.

4) பொன்விழா மாநாட்டு நன்கொடை வசூலுக்கென மத்தியச் சங்கத்திலிருந்து பெற்றுச் செல்லப்பட்ட நன்கொடைச் சீட்டுக்களில் விற்கப்பட்டது போக மீதமுள்ள நன்கொடைச் சீட்டுக்களை திருப்பி அனுப்பும்படி கோரியிருந்தோம். பல வட்டங்களிலிருந்து இதற்கு இன்னமும் பதிலே வரவில்லை.

5) உறுப்பினர்களுக்கு புதிய உறுப்பினர் எண் வழங்கிட சில விவரங்கள் நிதிச்செயலாளரின் 15.02.2011 சுற்றறிக்கை வாயிலாகக் கோரப்பட்டுள்ளது. அந்த விவரங்களை 10.03.2011 க்குள் அனுப்பி வைத்திட வேண்டுகின்றோம்.

வருங்காலத்திலாவது மத்தியச் சங்கத்திலிருந்து கேட்கப்படுகின்ற விவரங்களை அவற்றில் குறிப்பிட்ட தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும் என்ற உறுதியை மேற்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மீதமுள்ள 27 பகிர்மான வட்டக் கோட்டங்களுக்கு உதவி நிர்வாக அலுவலர் பொறுப்பு வழங்கிட வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

தோழமையுள்ள

பொதுச் செயலாளர்

நகல்: வட்டச் செயலாளர்கள்
(பகிர்மானம் தவிர்த்த இதர வட்டங்கள்)
மேற்குறிப்பிட்டவற்றில் தங்கள் வட்டதிற்குப்
பொருந்துகின்ற விஷயங்களில் தங்களது
பதில்களை வரையறுக்கப்பட்டுள்ள
தேதிகளுக்குள் மத்தியச் சங்கத்திற்கு
அனுப்பி வைத்திட வேண்டுகின்றோம்.

மின் எழுத்தர்

இணையதளம்

<u>நிதிச்செயலாளருக்கு தனிக்குறிப்பு</u>

தங்களுடன் அவ்வப்போது தொடர்பு கொள்கின்ற வட்டப் பொறுப்பாளர்களிடமும் மண்டலச் செயலாளர்களிடமும் மேற்கண்ட விவரங்களை தவறாமல் நினைவுப்படுத்திட வேண்டுகின்றேன்.